Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 14, 2023

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 14, 2023 | ஒளி: 08 கதிர்: 208 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## அதிர்வு தொடர்ந்தால் ஆபத்து

மொனராகலை மாவட்டத்தின் சில பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம் மீண்டும் மீண்டும் ஏற்பட்டாலோ அல்லது அதிர்வுகளின் எண்ணிக்கை அதிகரித்தாலே அது தீவிர பிரச்சினையாக மாறும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவின் பேராசிரியர் கபில தஹயனகே தெரிவித்தார்.



கடந்த 10, 11ஆம் திகதிகளில் மொனராகலை மாவட்டத்தின் புத்தல பிரதேச செயலாளர் பிரிவின் பல கிராமங்களில் சிறிய அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது.

தொடர்ச்சி P2

## விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன்

# “நலத்துடன் இருக்கிறார்”

### பழ.நெடுமாறனின் அறிவிப்பால் பரபரப்பு



தமிழீழத்தின் தேசிய தலைவர் பிரபாகரன் நலத்துடன் இருக்கிறார் என்கிற நற்செய்தியை உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கு உறுதியாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம் என்றும் உரிய நேரத்தில் வெளிப்படுவார் என்றும் உலக தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2

# “உயிருடன் இல்லை”

### துளியும் சந்தேகம் இல்லை என்கிறது இராணுவம்

புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் உயிரிழந்து விட்டார் என்றும் அவர் உயிரிழந்தமைக்கான ஆதாரம் தம்வசம் உள்ளதாகவும் இலங்கை இராணுவத்தின் ஊடகப்பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத், திங்கட்கிழமை (13) தெரிவித்தார்.

தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரன் நலமுடன் இருக்கிறார் என்று உலக தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் அறிவித்ததை அடுத்தே, இலங்கை இராணுவம் குறித்த செய்தியை வெளியிட்டுள்ளது.

குறித்த தினத்தில், பிரபாகரனை கொலை செய்தமைக்கான டி.என்.ஏ பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் வைத்துள்ளதாகவும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டு உள்ளதாகவும் இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



### அரசியல் கைதிகள் நால்வருக்கு

## 15 வருடங்களின் பின்னர் பிணை

2006ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதலில் கடற்படை வீரர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் இருந்து, தமிழ் அரசியல் கைதிகள் நால்வருக்கு காலி மேல் நீதிமன்றம், திங்கட்கிழமை (13) பிணை வழங்கியது.

தமிழ் அரசியல் கைதியான கந்தையா இளங்கோ உள்ளிட்ட 04 பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு, காலி மேல் நீதிமன்றத்தில் இன்று (13) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு



ஒக்டோபர் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடற்படையை சேர்ந்த ஒருவர் உயிரிழந்ததுடன், 22 பேர் காயமடைந்தமை குறித்து கந்தையா இளங்கோ உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 23 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் காலி மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## அத்தியாவசிய மருந்துகள் பலவற்றுக்கு தட்டுப்பாடு

நீரிழிவு நோயாளிகளுக்கான இன்சுலின், மெட்ஃபோர்மின், இதய நோயாளிகளுக்கான அஸ்பிரின், குழந்தைகளுக்கான சிரப், மயக்க மருந்து, புற்றுநோய், சிறுநீரக நோய் போன்றவற்றுக்கான மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

1, 300 அத்தியாவசிய மருந்துகளில் 140 முதல் 150 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சங்கம்




சுட்டிக்காட்டியுள்ளது.

சில அத்தியாவசிய மருந்துகளின் கையிருப்பு ஜனவரி இறுதிக்குள் தீர்ந்துவிட்டதாகவும் அந்த மருந்துகளை பிரதியீடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், சில வைத்தியசாலைகளில் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் மருந்துப் பற்றாக்குறையால் சத்திரசிகிச்சைகள் சில இடைநிறுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் அதிகரித்து வரும் மருந்துப் பற்றாக்குறைக்கு தீர்வு கிடைக்காமையால், பல வைத்தியசாலைகளில் மருத்துவப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மின்வெட்டு, எரிபொருள் வரிசை மூலம்

## நெருக்கடியை உருவாக்க சதி

மின் வெட்டு மற்றும் எரிபொருள் வரிசைகளை அதிகரித்து, நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த சில குழுக்கள் சதி செய்து வருவதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சில ஆணைக்குழுக்களில் உள்ள சிலரால் அந்த அரசியல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், மேற்குறிப்பிட்ட சதி முயற்சிகள் குறித்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சை காலப்பகுதியில் ஏழரை மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதை சிலர் மறந்துவிட்டதாகவும் 2,3 நாள்களுக்கு வரிசைகளில் காத்திருந்தமையையும் நினைவூட்டினார்.

தொடர்ச்சி P2



## மலையக தமிழர் குறித்து அதிக அக்கறை வேண்டும்

### பா.ஜ.க பிரதிநிதிகளிடம் மனோ தெரிவிப்பு

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் அதிக அவதானம் காட்டவேண்டும். தொப்புள் கொடி உறவுகளான எம்மீது, இந்தியாவின் குறிப்பாக இந்திய மத்திய அரசாட்சி கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் அக்கறை இன்னமும் கணிசமாக அதிகரிக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எதிர்பார்க்கிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

இலங்கைக்கு வருகைதந்த மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை, மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் எல்.

தொடர்ச்சி P2

### மட்டக்களப்பு மங்களாராமய விகாராதிபதியை

## குறி வைத்து துப்பாக்கி சூடு

### அறைக்கு சேதம்; தேரருக்கு காயமில்லை

மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தன தேரரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருந்து காயங்கள் எதுவும் இன்றி தேரர் உயிர்தப்பியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை (13) அதிகாலை இனந்தெரியாத நபர் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகம்



நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் தேரர், தனது அறையில் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாக தெரிவித்த பொலிஸார், அவருடைய அறை மீது தோட்டாக்கள் பாய்ந்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை

## டிஜிட்டல் மயமாக்குவதாக அமைச்சர் மனுஷ உறுதி

ஓமானில் உள்ள வேலை வாய்ப்புகளுக்கு இலங்கை பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் நடைமுறை தாமதங்களை தவிர்க்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை டிஜிட்டல் மயமாக்குவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார உறுதியளித்தார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஓமானுக்குச் சென்றுள்ள அமைச்சரிடம் ஓமானில் உள்ள தொழிலாளர் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் தலைவர்கள் விடுத்த வேண்டு கோளுக்கு அமைய அமைச்சர் உறுதி வழங்கியுள்ளார்.

தொழிலாளர்கள் ஆட்சேர்ப்புக்கு தேவையான அனுமதிகளைப் பெறுவதற்கு தூதரகத்திற்கு வருவதற்கு தனிப்பட்ட முறையில் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதாக தொழிலாளர் ஆட்சேர்ப்பு முகவர் அதிகாரிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

தொடர்ச்சி P2

### தபால் மூல வாக்கு அட்டை

## நாளை முதல் விநியோகம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர்களுக்கான வாக்கு அட்டை அடங்கிய பாதுகாப்பு பொதிகள் நாளை 15ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட உள்ளதாகவும் அன்றையதினம் முதல் அவற்றை விநியோகிக்க உள்ளதாகவும் தபால் திணைக்களம் தெரிவித்தது.

மேலும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 19ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## ரயில் இயந்திர சாரதிகளின் வேலை நிறுத்தம் வாபஸ்

ரயில் இயந்திர சாரதிகளால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டம், அதிகாரிகளுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து வாபஸ் பெறப்பட்டது.

தொடர்ச்சி P2

### மின்கட்டண திருத்த விவகாரம்

## மனுவை பரிசீலிப்பது குறித்து பெப்ரவரி 17 இல் தீர்மானம்

உத்தேச மின் கட்டண திருத்தத்துக்கு அனுமதி வழங்கும் அமைச்சரவை தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிப்பதற்கு அனுதிப்பதா, இல்லையா என்பது குறித்த தீர்மானம் பெப்ரவரி 17ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் திங்கட்கிழமை (13) அறிவித்தது.

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் ஆகியவை தாக்கல் செய்த ரிட் மனு, சோபித ராஜகருணா, தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

### இரசாயன, சேதன உரங்களை பயன்படுத்த

## தேசிய அரச உரக் கொள்கை

பயிர்ச்செய்கைக்காக இரசாயன மற்றும் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கான தேசிய அரச உரக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று (13) விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் விவசாய அமைச்சில் இடம்பெற்றது.

அதன்போது, உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி குழுவின் முன்மொழிவுக்கு அமைய குழுவால் தேசிய கொள்கைக்காக 35 முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

நெற்பயிற்செய்கையில் எவ்வளவு இரசாயன மற்றும் சேதன உரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து விவசாய வல்லுநர்கள் தெளிவான விளக்கத்தை முன்வைக்க வேண்டும் என்றும், அந்த சதவீதத்தின் அடிப்படையில், தேவையான சேதன மற்றும் இரசாயன உரங்களின் அளவை தீர்மானிக்க முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன்

# "நலத்துடன் இருக்கிறார்"

தமிழகத்தின் தஞ்சாவூரில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேசச் சூழலும், இலங்கையில் ராஜபக்‌ஷ ஆட்சியை வீழ்த்தும் அளவுக்கு வெடித்துக் கிளம்பியிருக்கிற சிங்கள மக்களின் போராட்டங்களும், தமிழீழத் தேசிய தலைவர் வெளிப்படுவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்று நெடுமாறன் சுட்டிக்காட்டினார்.

பிரபாகரனின் குடும்பத்தாருடன் பழகி வருவதால், இந்தத் தகவலை அவர்களது அனுமதியுடன் கூறுவதாகவும் தற்போது அவர் எங்கே இருக்கிறார் என்ற தகவலை இப்போது தெரிவிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அவரது குடும்பத்தினர் தன்னுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர் உரிய நேரத்தில் வெளிப்படுவார் என்றும் கூறிய அவர், பிரபாகரன் நலத்துடன் இருக்கிறார் என்கிற நற்செய்தி, இதுவரை அவரைப் பற்றித் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட யூகங்களுக்கும், ஐயங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை விரைவில் அவர் அறிவிக்க இருக்கிறார் என்றும் தமிழீழ மக்களும், உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம் என்றும் பழ.நெடுமாறன் வேண்டுகோள் விடுத்தார்.

# "உயிருடன் இல்லை"



பிரபாகரன் குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு, தங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்த அவர், அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்பது தங்களுக்கு தெளிவாகத் தெரியும் என்றும் அதில் சந்தேகமே இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## அதிர்வு தொடர்ந்தால் ஆபத்து

10ஆம் திகதி மதியம் மூன்று நிலநடுக்கங்கள் ஏற்பட்டதுடன் 11ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக மொனராகலை அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்தது.

இந்நிலையில், அப்பகுதியில் இதுபோன்ற அதிர்வுகள் அதிகம் ஏற்பட்டால் மற்றும் அதிர்வுகளின் அளவு அதிகரித்தால் அவதானமாக இருக்க வேண்டும் என்று பேராசிரியர் குறிப்பிட்டார். மொனராகலையில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்கும் துருக்கியில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுத்த அவர், இந்தியப் பெருங்கடல் தட்டுக்கு அருகாமையில் இலங்கை அமைந்திருப்பதால் எவ்வித தொடர்பும் இருக்க முடியாது என்றார்.

## 15 வருடங்களின் பின்னர் பிணை



வழக்கின் முதலாவது பிரதிவாதியான கந்தையா இளங்கோ, 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

முதலாவது பிரதிவாதியால் வழக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி இடம்பெற்ற உண்மை விளம்பல் விசாரணையின் போது, நீதமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளதை பிரதிவாதி தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு விமானப்படையால் நடத்தப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் முதலாவது பிரதிவாதி தனது வலது காலை இழந்துள்ளதுடன், 15 வருடங்களாக வழக்கு விசாரணை நிறைவு செய்யப்படாமை குறித்தும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி மன்றுக்கு எடுத்துரைத்ததை அடுத்து, நால்வருக்கும் பிணை வழங்கப்பட்டது.

பிரதிவாதி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா ஆஜராகியதுடன், சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மொஹமட் பாரி ஆஜராகியிருந்தார்.

### மின்கட்டண திருத்த விவகாரம்

## மனுவை பரிசீலிப்பது குறித்து பெப்ரவரி 17 இல் தீர்மானம்

அதன்போது, மின்சார சபை உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மின் கட்டண திருத்தம் தொடர்பான அமைச்சரவை முன்மொழிவுகளை நீதிமன்றில் முன்வைத்தார்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை பரிசீலித்து மனுவை பரிசீலிப்பதற்கு அனுமதிப்பதா, இல்லையா என்பது குறித்த தீர்மானம் 17ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று நீதியரசர்கள் அறிவித்தனர்.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அமைச்சரவை, சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் விதிகளை நிறைவேற்றி, ஒழுங்குமுறை ஆணைக்குழுவான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அமைச்சரவை குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டிள்ளனர்.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீன ஆணைக்குழு என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அவ்வாறான உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்மொழியப்பட்ட மின் கட்டணங்கள் அமைச்சரவையால் அங்கிகரிக்கப்பட்டதாகவும் 09.01.2023 திகதியிட்ட மேற்படி அமைச்சரவை தீர்மானம் சட்ட அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது என்றும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

## ரயில் இயந்திர சாரதிகளின் வேலை நிறுத்தம் வாபஸ்


ரயில்வே திணைக்களத்துக்கு உயரதிகாரி ஒருவரை நியமித்தல், மேலதிக நேர கொடுப்பனவுகள், பதவி உயர்வு தொடர்பான விடயங்களை அடிப்படையாக கொண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்திருந்தன.

அதற்கிணங்க, ரயில் இயந்திர சாரதிகளால் திங்கட்கிழமை (13) காலை வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்காரணமாக, பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதுடன், பிரதான, கரையோர மற்றும் புத்தளம் மார்க்கங்களில் 10 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது.

## அத்தியாவசிய மருந்துகள் பலவற்றுக்கு தட்டுப்பாடு

சுகாதார அமைச்சின் மருத்துவக் களஞ்சியங்களிலும் மாகாணப் பகுதிகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட மருந்துப் பொருட்கள் மட்டுமே இருப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது.




அண்மைக்காலமாக அரச வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை குறித்து சுகாதார தொழிற்சங்கங்கள் மற்றும் மருத்துவ சங்கங்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக தமிழர் குறித்து அதிக அக்கறை வேண்டும்

முருகன் மற்றும் பாரதீய ஜனதா கட்சியின் தமிழக கிளை தலைவர் கே. அண்ணாமலை ஆகியோருக்கும், இலங்கை அரசியல் சமூக தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பை இந்திய தூதரகம், ஞாயிற்றுக்கிழமை (12) ஏற்பாடு செய்திருந்தது.

அந்தச் சந்திப்பிலேயே முருகன் மற்றும் அண்ணாமைலை ஆகியோரிடம் மனோ எம்.பி மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்ததுடன், அங்கு மேலும் தெரிவித்ததாவது;

"இந்தியாவை எந்தக் கட்சி ஆள்கிறது என்பது இந்திய உள்விவகாரம். அதில் நாம் தலையிடோம். இப்போது ஆள்கின்ற கட்சி உங்கள் பாரதிய ஜனதா கட்சி. நீங்கள் இருவரும் உங்கள் கட்சியின் இரண்டு பிரதான ஆளுமைகள்.

உங்கள் கட்சி, அரசாங்கம் சார்பில் நீங்கள் இருவரும், மலையக தமிழர் தொடர்பில் அதிக அவதானம் காட்டவேண்டும்.

தென் தமிழக மாவட்டங்களில் இருந்து சரியாக 1823 ஆண்டு முதல் இலங்கைக்கு ஆங்கிலேயரால் கொண்டுவரப்பட்டு, 2023இல் 200 ஆண்டுகளை இலங்கையில் நிறைவு செய்யும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் உங்கள் அரசும், நாடும் மிக அதிக அக்கறையை கொள்ள வேண்டும் என நான் கோருகிறேன்.

1964ஆம் ஆண்டின் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் எம்மை இந்நாட்டில் பலவீனப்படுத்தி விட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, நமது மக்கள் நாடு கடத்தப்பட்டு இருக்காவிட்டால், இன்று இலங்கை பாராளுன்றத்தில் சுமார் 25 மலையக தமிழ் எம்.பிக்கள்இருந்திருப்போம்.

வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிகளுடன் சேர்த்து சுமார் 50 தமிழ் எம்.பிக்கள் அரசியல் பலத்துடன் இலங்கையில் இருந்திருக்க வேண்டிய நிலைமையை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாமல் செய்து விட்டது.

அந்த சிறிமா-

> **இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை அமைத்து, அதற்கு தமிழகத்தில் இருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாட ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்புவதாகும்**

சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் எஞ்சியவர்களுக்கு இலங்கை முழு குடியுரிமை வழங்க வேண்டும். இன்று சட்டப்படி குடியுரிமை இருக்கிறது. ஆனால், காணி, கல்வி, வீட்டு, சுகாதார உரிமைகள் இந்நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமாமாக எமது மக்களுக்கு இல்லை.

ஆகவே, முழு குடியுரிமை இல்லை. இதற்காகவே நாம் ஜனநாயக ரீதியாக இலங்கைக்கு உள்ளே போராடுகிறோம். இதை இலங்கை அரசுக்கு ஞாபகப்படுத்தி பெற்று தர வேண்டிய கடப்பாடு இந்திய அரசுக்கு இருக்கிறது.

எங்கள் மக்கள் எழுச்சி அடைய முதல் தேவை, கல்வி எழுச்சியே. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை இடைநிலை, கபொத சா/த. உ/த, வகுப்புகளில் எமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியில் போதிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. இதற்காக உங்கள் நாட்டு ஆசிரியர்கள் இங்கே வந்து எமது பாடசாலைகளில் கற்பிப்பதை இந்நாட்டு ஆசிரிய தொழில் சட்டங்கள் ஏற்காது.

நமது ஆசிரிய பணி விண்ணப்பதாரிகளை நாம் இந்தியாவுக்கு அனுப்ப மாட்டோம். ஆகவே ஒரே வழி, எமது மக்களுக்கான விசேட ஒதுக்கீட்டு திட்டத்தின் அடிப்படையில், இங்கே ஆசிரிய பயிற்சிகளை நடத்த கலாசாலை அமைத்து, அதற்கு தமிழகத்தில் இருந்து கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் பாட ஆசிரிய பயிற்சிகளை வழங்க பயிற்சியாளர்களை அனுப்புவதாகும்.

இந்தத் திட்டத்தை உங்கள் அரசு உடன் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான உள்நாட்டு அனுமதிகளை, கட்டமைப்புகளை இலங்கை ஜனாதிபதியுடன் பேசி நாம் செய்து தருவோம்" என்றார்.

அமைச்சர் முருகன், பா.ஜ.க தமிழக தலைவர் அண்ணாமலை, இந்திய தூதுவர் கோபால் பாகலே, அமைச்சர் ஜீவன் தொண்டமான், ரிஷாட் பதியுதீன் எம்.பி, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், கோபியோ இலங்கை கிளை தலைவர் குமார் நடேசன், வர்த்தகர் கோபால்சாமி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## நெருக்கடியை உருவாக்க சதி

இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் செலவினங்களும் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் அதற்காகவே மறுசீரமைப்பு வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், அதற்கும் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வருவதாக தெரிவித்தார்.

## டிஜிட்டல் மயமாக்குவதாக அமைச்சர் மனுஷ உறுதி

தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதியைப் பெற தாம் நிறைய நேரத்தையும் பணத்தையும் செலவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர்.

தூதரகத்தில் அதிகாரிகளின் பற்றாக்குறையால், அனுமதி பெறுவதில் மேலதிக நேரம் செலவிடப்படுவதாகவும் அவர்கள் கூறினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதே இவ்வாறான பிரச்சினைகளைக் குறைப்பதற்கான சிறந்த வழி என்றும் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக நேர்காணல்களை நடத்தியதன் பின்னர் வீட்டுப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

சுற்றுலா விசா மூலம் ஓமானில் வீட்டு வேலைக்காக பெண் பணியாளர்களை அழைத்து வருவதால் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## நாளை முதல் விநியோகம்

இம்முறை 6 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் அதிகமான தபால் மூல விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழு அவற்றில் 36 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதுடன், அன்றைய தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் 28ஆம் திகதி

> **தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதுடன், அன்றைய தினங்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் 28ஆம் திகதி வாக்களிக்க முடியும்**

வாக்களிக்க முடியும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனிடையே, சுமார் 02 இலட்சம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தேசிய அரச உரக் கொள்கை

அரச உரக் கொள்கையொன்றை வகுக்கும் போது விவசாயத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்ட உர உற்பத்திகளுக்கு மாத்திரமே அங்கிகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு வசதியாக உரம் வழங்கும் செயல்முறையை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான விலையை வழங்குவது குறித்து கவனம் செலுத்துமாறு உணவு பாதுகாப்புக் குழுவிடம் அமைச்சர் கூறினார்.

முன்மொழிவுகளை குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால முன்மொழிவுகளாக அமல்படுத்துவதற்கும் அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்கும் தீர்மானம் எட்டப்பட்டது.



ஞா.திரிஷா

# ஒரு காதல் மனு

காதல் என்னும் மகத்தான உணர்வை வார்த்தைகளால் வரைவிலக்கணப்படுத்துவது சற்று கடினமான ஒன்றுதான். காதலுக்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்கின்றனர் கவிஞர்கள்

நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை ஒவ்வொரு தருணத்திலும் காதலை உணர்ந்திருப்போம். ஒரு குழந்தை தன் தாயிடம் உணரும் முதல் விலை மதிப்பற்ற காதல், நடைப்பயில கற்று தரும் அந்த தகப்பனின் காதல், முதல் நாள் பள்ளிக்கு செல்லும் போது அழுகையுடன் அமர்ந்திருக்கையில் கட்டி அனைத்து கதை கூறும் ஆசானின் காதல், உறவிலும், உணர்விலும், உடலிலும் கலந்து ஒட்டி இருக்கும் நட்பின் காதல், சேர்ந்திருக்கும் நேரத்தில் மனதை இழகுப்படுத்தும் செல்ல பிராணிகளின் காதல், என ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஒரு வகை காதலை சுவைத்துக்கொண்டு தான் வருகின்றான்.

இவ் வகையான எத்தனையோ காதல் இருந்தாலும் அனைவராலும் அதிகம் பேசப்படும், மதிக்கப்படும் காதல்தான் பருவ வயதை எய்திய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றிடும் உன்னதமான உணர்வு! இதுவே எல்லோரிடமும் காதலாக புலங்கி வருகின்றது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள காதல் என்பது தாகமும் குடிநீரும் போல் ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. இந்த யுகத்தில் நாம் கற்காமலேயே நம்மில் தோன்றும் அபூர்வமான ஒரு விஷயம்தான் காதல். அந்த உணர்வுக்கு மயங்காதவர் எவருமிலர். அதனை விரும்பாதவர் யாரும் இல்லை. அன்பு பாசம் போன்றவைகளுடன் பிணைந்து நிற்பதுவே காதல், அந்த காலத்து காதல் இந்த காலத்து காதல் என பிரித்து பார்க்க நான் விரும்பவில்லை. எந்த காலத்தின் காதலாக இரந்தாலும் காதல் உண்மையானதாக உள்ளதா என்பதே முக்கியம். இருந்தாலும் 2023இல் நாம் வாழ்வதால் உணர்வுடன் கருத்துக்களை பகிர்வதால் இந்த காலத்து காதலைப் பற்றியே கூற விரும்புகின்றேன்.

இந்த காலத்தில் பள்ளி பருவம் தொடங்கி தொழிலுக்கு செல்லும் பாதை வரை காதல் மயப்பட்டு தான் இருக்கின்றது. ஆண் பெண் இருவரிடமும் ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை, சேர்ந்து வாழ வேண்டும் என்பனவற்றை அடைவதற்கான ஓர் ஆசையினால் காதல் மலர்கின்றது.

தற்காலத்தில் அழகிற்கும் அதிக முக்கியத்துவம் காதல் கொடுத்து வருகின்றது. தினம் தினம் பலரை நம் வாழ்வில் கடந்து செல்கின்றோம் அவர்களில் அழகாக இருப்போர் அனைவரும், எம்மை ஒரு கனம் திரும்பி பார்க்க வைப்பார்கள். இதற்காகவே ஆண்களும் பெண்களும் பல முயற்சிகளை எடுப்பதோடு அதிக கவனம் செலுத்துகின்றனர். அதற்காக பணத்தையும் செலவிடுகின்றனர்.

நான் ஏன் இந்தப் பெண்ணை அல்லது ஆணை காதலிக்கின்றேன் என தனக்குள்ளே கேள்வி கேட்டால் மனசாட்சி சொல்லும் பதில் அவள் அல்லது அவன் அழகாக இருக்கிறான் என்பதுதான் பதிலாக இருக்கும் ஆனால் அதை ஒப்பு கொள்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.


பெண் ஒருத்தி காதலிப்பவனின் அழகின் உன்னத்தை எதிர்பார்ப்பதும் இரசிப்பதும் அதிகம் ஆனால் அந்த அழகை இழக்கும் வண்ணம் ஆண்கள் குடிப்பதனால் குறுகிய காலத்தில் தொந்தி விழுந்து, முகம் வீங்கி அவலட்சணமான தோற்றத்திற்கு மாற்றமடைவதுடன் தன் வயதை விட முதிர்ந்த தோற்றம் உடையவனாக மாறுகின்றான். இதனால் காதலியின் மனநிலை எவ்வாறு மாறும் அவள் வாழ்க்கை நிலை எவ்வாறு மாறும், பியர் குடித்து தன் வயதான தோற்றத்திற்கு மாறி இருக்கும் காதலனை உறவினர்குளுக்கும் நண்பர் கூட்டத்திற்கும் அறிமுகப்படுத்துவதற்கும் சற்று தயக்கம் கொள்வாள், அவனுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டாலும் அதை அனைவரையும் போல் சமூக வளைத்தளங்களில் பதிவிட்டு பலரின் விருப்புகளையும், கருத்துக்களையும்; அறிந்துக் கொள்ள ஆசைப்பட்டாலும் காதலனின் தோற்றத்தால் ஆசை நிராகரிக்கப்படுகின்றது.

குடிக்கும் காதலன் கட்டி அணைத்து முத்தம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் முத்தத்தின் சுவையையும் இன்பத்தையும் அனுபவிக்க தடையாக நாற்றம் காதலியின் குடலை குமட்டி எடுக்கும் அத்தருணம் அவளுக்கு நரகமாய் மனதிற்குள் தோன்றி செல்லும். குடிப்பதற்காக ஏமாந்து இருப்பவன் வாழ்க்கையில் எல்லா விடயங்களுக்கும் ஏமாந்துவிடும் ஒரு கோமாலியாக அவளின் எண்ணங்களில் ஆழமாக பதியும், காதலின் உச்ச மகிழ்ச்சி திருமணத்தின் பின் இல்லற வாழ்வில் ஆண் பெண்ணுக்கும் தரும் இன்ப உணர்வை இருவரும் அனுபவிப்பதாகும்.

அந்நேரத்தில் குடிக்கும் ஆணின் எண்ணங்களில் தொடர்பான சிந்தனைகளே அதிகம் ஓடிக்கொண்டு இருக்கும் இதனால் பெண்ணின் இன்பம் கானல் நீராய் களைந்து விடுகின்றது. இவ்வாறான இன்பங்கள் பெண்ணுக்கு மறுக்கப்பட்டாலும் காதலனுடன் சேர்ந்து சிரிக்கும் பழகும் நேரத்தை பொன்னான நேரங்களாக வாங்கிக்கொள்வாள். ஆனால், குடித்தால் தான் மகிழ்ச்சி என்று இருக்கும் காதலனுக்கு உண்மையான மகிழ்ச்சியையும் அன்பையும் ருசித்து பார்க்க முடியாத துரதிஸ்டசாலிகளாக இருக்கின்றார்கள். இவ்வாறான காரணங்களினால் பெண்ணின் மனம் உடைக்கப்பட்டு அவளின் எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தவனை தேர்ந்தேடுக்கின்றால். இதனால் காதலும் சற்று கசங்து தான் போகின்றது.

புனித காதலைப் பெற்றும் வண்ணமாக வேலன்டைன் நாள் உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலராலும் பெப்ரவரி 14 அன்று கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாக இருக்கின்றது. இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலை தெரிவித்துக் கொள்கின்றனர். வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாற்றிக்கொள்கின்றார்கள்.இக் கொண்டாட்டம் பெப்ரவரி 7இல் இருந்து ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு தினங்களாக கொண்டாடப்படுகின்றது.

இவ்வருட காதலர் தினத்தில் அனைவரும் காதல் இரத்து அற்ற உண்மையான காதலை ருசிக்க வேண்டும். அறிவை திறந்து ஏமாறாத ஆண்களை காதலிப்பதற்கு காத்திருக்கும் பெண்களின் ஓர் காதல் மனு இது.



# அத்துமீறும் இழுவை மீன்பிடி



நிந்தனா உதயச்சந்திரன்
(நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



எப்போது பிரியும் உயிர் என்று தெரியாத ஒரே தொழில் அவனுடையது. துடுப்பு வீட்டில் இருந்தாலும் வாழ்க்கையில் அவன் மூழ்கிக்கொண்டுதான் இருக்கின்றான்- மீனவன்

இலங்கையின் உள்நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய வகிபாகமாக இருப்பதுடன் குறிப்பிட்ட அளவு அன்னிய செலவாணியை பெற்றுத்தரும் தொழிலாக இருப்பதும் மீன்பிடியாகும். இங்கு கரையோரப்பகுதிகளைப் பொறுத்தவரையில் மீன்பிடி கருவாடு உற்பத்தி மற்றும் சுற்றுலா துறையை முக்கியப்படுத்தினாலும் கரையோரப்பகுதிகளில் மீன்பிடியை நம்பி வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தும் குடும்பங்களே அதிகம்.

இங்குள்ள பெரும்பாலான மீனவர்கள் கண்ணாடியிளைப் படகுகள் மற்றும் வள்ளங்ளைப்பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளினை மேற்கொண்டு வருகின்றனர். என்னும் சில பகுதிகளில் தூண்டல்கள், சுழியோடல் மற்றும் கட்டுவலை, கரவலை மூலம் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் வழிச்சல் வலை, சுருக்குவலை லைலா வலை போன்ற முறைகளும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் யுத்தம் முடிவடைந்த பிற்பாடு வடக்கு கடல் எல்லைப் பகுதிகளில் இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிட நடவடிக்கைகள் மற்றும் இழுவைப் படகின் மூலமான

கடற்தொழில் நடவடிக்கை காரணமாக எமது நாட்டு மீன்வளம் முற்றாக நாசமடைவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

கடற் பரப்புக்களில் உள்ள இயற்கைப் பல்வகைமையை அழிக்கும் விதமாக பாரிய மடிகளைப் பயன்படுத்தி தடை செய்யப்பட்ட அடிமட்ட வலைப்பாச்சலின் ஊடாக கடலின் அடிப்பகுதியில் உள்ள அனைத்து வளங்களையும் அள்ளிச் செல்வதுடன் அளவு வித்தியாசம் இன்றி அனைத்து அளவிலான மீன்களையும் அள்ளி செல்கின்றது இவ் இந்திய மீனவர்களின் இழுவை படகுகள்.

இவ்வாறாக பாரிய இயந்திரங்களை பயன்படுத்தி கடல் அடிமட்டத்தில் பாரிய சங்கிலிகளால் பொருத்தப்பட்டிருக்கும் மடி வலைகளால் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் முருகைக் கற்பாறைகள், மீன்கள் மறைந்து வாழும் வாழிடங்கள், இயற்கை தாவரங்கள்ரூபவ் சேறுகள் மற்றும் பல வகையான பாசிகள் என எல்லாமே அள்ளிச் செல்லப்படுகின்றன. அத்தோடு எமது மீனவர்கள் நாள் ஒன்றுக்குப் பிடிக்கும் மீன்களின் அளவினை விட ஐந்து மடங்கு அதிகளவான மீன்களை அள்ளிச் செல்கின்றது. அவற்றை விட கடல் வளங்களையும் அழித்தும் செல்கின்றது.

இந்தியக் கரையோரங்களினைப் பொறுத்தவரையிலே இவ்வாறான இழுவைப் படகுகளினுடைய செயற்பாட்டினால் குறிப்பான தமிழ்நாட்டை சூழ உள்ள இராமேஸ்வரம், தனுஸ்கோடி போன்ற பகுதிகளிலே வசிக்கும் மீனவர்கள் குறிப்பாக 30 வருடங்களுக்கு மேலாக அப்பகுதிகளைச் சூழ உள்ள கடல் பகுதிகளில் இவ்வாறான இழுவைப் படகுகளை பயன்படுத்தி அடிமட்ட வலைகள் ஊடாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையிலே தற்போது மீன் வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அப் பகுதிகளிலே மீன்களினுடைய இனப் பெருக்கமும் சடுதியாகக் குறைந்துள்ளது. குறிப்பாக இவ் இழுவைப் படகு மூலமாக சர்வ சாதாரணமாக வெளிக் கொண்டு செல்லப்படும் கடல் அனிமனி எனக் கூறப்படும் விலங்கினுடைய புறவன்கூடு அதாவது முருகைக்கற்பாறைகள் மீண்டும் உருவாக பல ஆயிரம் ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

இவ்வாறான இந்திய மீனவர்களின் அத்து மீறிய மற்றும் ஆபத்தான மீன்பிடி நடவடிக்கை காரணமாக வடபகுதி மீன்வளம் முற்று முழுதாக சூறையாடப்படுவதுடன் கடல் வளங்களும் அழிக்கப்படுகின்றன. அது மாத்திரம் இன்றி கடல் நீர் மற்றும் இயற்கை சூழலும் மாசடைகின்றது.

இதை விட பெருந்தொகையான மீன்வளம் யாருக்கும் பயனற்ற முறையில் நாள்தோறும் இந்திய மீனவர்களால் அழிக்கப்படுவதாகவும் இலங்கை கடற்தொழிலாளர்களின் வலைகளையும் நாள்தோறும் இந்திய மீன்பிடிப் படகுகள் அறுத்து நாசம் செய்வதாகவும் இலங்கையின் கடற்தொழில் அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்பெயின், நோர்வே உட்பட பல நாடுகள் இவ்வாறான இழுவைப் படகுகள் மூலமான மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக தற்போது அந்த நாட்டில் உள்ள மீன்வளங்கள் பாரிய அளவில் அழிந்துள்ளது. தற்போது அந்த நாடுகள் தங்கள் நாட்டில் மீன்பிடியை மேற்கொள்ள முடியாமையினால் கடல் எல்லைகளைத் தாண்டி சில ஆபிரிக்க நாடுகளின் கடல் பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறித்த நாடுகளின் மீன்வளம் பழைய நிலைக்குத் திரும்ப சுமார் 100 வருடங்களுக்கு மேலான காலப்பகுதி தேவை என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இதே போன்ற ஒரு பின்னணியிலே இந்திய இழுவைப்படகுகளின் வருகையும் நாட்டுக்குள் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான இந்திய மீனவர்களின் வருகையின் பின்னணியில் வெறுமனே வருமானம் மட்டும் நோக்காகக் கொள்ளப்பட்டால் இலங்கைக் கடற்படையின் ரோந்து நடவடிக்கையே அவர்களை திருப்பி அனுப்பி விடும். ஆனாலும் இதன் பின்னால் உள்ள பல பண முதலைகளின் இலாபத்திற்காக வருமானம் இன்றி போதிய கல்வி இன்றி வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் பல அப்பாவி தமிழக மீனவர்கள் அலக்கு வைக்கப்படுகின்றனர் என்பதே உண்மை.

இந்த நிலையில் இலங்கை மீனவர்கள் தங்கள் தொழிலை தக்க வைப்பதுடன் மீன வழங்களையும் பாதுகாக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. வெறுமனே போராட்டங்கள் ஊடாக இந்திய மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முனைவது சாத்தியமற்றதே. மாறாக இரு நாட்டு மீனவர்களும் சர்வதேச கடல் எல்லைகள் சார்ந்த பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் இலங்கை மீனவர்களும் ஆழ்கடல் மீன்பிடி போன்ற நடவடிக்கைகளுக்கு தம்மை தயார்ப்படுத்துவது சிறந்ததாகும்.

இதை விடுத்து இரு நாடுகளின் இராஜதந்திர பிரச்சினை என அரசியல் மயப்படுத்தாது இரு தரப்புக்களும் நடைமுறைப்படுத்தக்கூடிய காத்திரமான முடிவுகளை பேச்சு வார்த்தைகள் மூலமும் கலந்துரையாடல்கள் மூலமும் எடுத்துரைக்கும் போதே எமது வளம் பாதுகாக்கப்படும் என்பதுடன் தமிழகத்துடனான இணக்கமான சூழல் ஏற்படும். இதை விடுத்து போராட்டங்களும் மட்டமான செயற்பாடுகளும் இடர்பாடுகளையே ஏற்படுத்தும் என்பதே உண்மை.

வீதியில் தோண்டப்பட்ட குழிகள்:

# இடைநடுவில் மகப்பேறு

## பெண்கள், நோயாளர்கள் உயிராபத்து

நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி மேற்கில் உள்ள கிராமங்களின் கற்பிணிகள், நோயாளர்கள் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளதாக இப்பகுதி மாதர் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி, பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான வீதி புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டு உள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் குறித்த வேலை தொடங்கப்பட்டு, இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. இதன் காரணமாக கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற ஆயிரம் வரையான குடும்பங்கள், போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

**“ வேரவில் பிரதேச வைத்தியசாலையில் இருந்து நோயாளர் வண்டி மூலம் கொண்டு செல்லப்படும் கற்பிணி பெண்களுக்கு இடைநடுவில் மகப்பேறு நிகழ்கின்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இதைவிட உயிர் ஆபத்தான நோயாளர்களை வேகமாக மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமையும் காணப்படுகின்றது**

குறிப்பாக, புனரமைப்புக்கென வீதியில் தோண்டப்பட்ட குழிகள் காரணமாக, வேரவில் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் வண்டி விரைவாக முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கோ கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கோ செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

வேரவில் பிரதேச வைத்தியசாலையில் இருந்து நோயாளர் வண்டி மூலம் கொண்டு செல்லப்படும் கற்பிணி பெண்களுக்கு இடைநடுவில் மகப்பேறு நிகழ்கின்ற நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இதைவிட உயிர் ஆபத்தான நோயாளர்களை வேகமாக மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இந்நிலையில், கற்பிணிப் பெண்கள், நோயாளர்களின் நலன் கருதி, வேரவில் பிரதேச வைத்தியசாலையில் இருந்து பல்லவராயன்கட்டுச் சந்தி வரை வீதி புனரமைப்புக்காக சிதைக்கப்பட்டுள்ள வீதியை தற்காலிகமாகப் புனரமைத்து, வேரவில் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் வண்டி முழங்காவில், கிளிநொச்சி பகுதிகளுக்கு செல்வதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மாதர் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## விபத்தில் கொழும்பு வாசி உயிரிழப்பு

எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், கொழும்பு, மாளிகாவத்தை பகுதியை சேர்ந்த பழனி கணேசதாசன் என்பவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி, தெல்லிப்பளையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி , யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில், மோட்டார் சைக்கிளில் பிறிதொரு நபருடன் சென்ற வேளை, மாவிட்டபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்களை தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இங்கு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கொழும்பு வாசி உயிரிழந்தார்.

மன்னார் ஒட்டோ சங்கத்தின்

## புதிய நிர்வாக சபை



மன்னார் நிருபர்

மன்னார் மாவட்ட ஓட்டோ சேவையாளர் சங்க புதிய நிர்வாக தெரிவு ஞாயிற்றுக்கிழமை (12) மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் நகர சபையின் தவிசாளர் ஞா. அன்ரனி டேவிட்சன், வடமாகாண சபையின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன், மன்னார் நகர போக்குவரத்து பொலிஸ் அதிகாரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது, புதிய நிர்வாக தலைவராக எஸ். சுபதீபன் (சசி) தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக எம்.எப் பாசில், பொருளாளராக எம். இஜாஸ் உள்ளடங்கலாக நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பெண் அடித்துக்கொலை

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், அத்தியடி பகுதியை சேர்ந்த சுப்பிரமணியம் கலாநிதி (வயது 52) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து கொலை செய்யப்பட்டவரின் மகள் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பதாவது; “வீட்டுக்கு, வீட்டு வேலைகள் செய்வதற்கும், ஆடுகளுக்கு குழைகள் வெட்டவும் என ஒருவர் வந்துசெல்வார். அவர் நேற்றைய தினமும் வந்திருந்த போது, நான் வீட்டுக்குள் இருந்தேன். அம்மா தான் அவருடன் கதைத்துக்கொண்டு இருந்தார். பிறகு இருவரும் வாக்கு வாதப்படுவது கேட்டது; சிறிது நேரத்துக்குள் அம்மா பெரிய சத்தமாக கத்தினார். சத்தம் கேட்டு வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த போது , அம்மா இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அந்நபரை அவ்விடத்தில் காணவில்லை” என வாக்குமூலம் அளித்துள்ளார்.

மரக்கட்டை ஒன்றால் தாக்கியே, பெண் கொலை செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

## மாணவர்களுக்கு காலணிகள்

சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு காலணிகள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 68 ஆவது காலாட் படைப்பிரிவின் 682 ஆவது காலாட் பிரிகேடின் 6 ஆவது இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியினரால் உடையார்கட்டுப் பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழு மாணவர்களுக்கு காலணிகளை நன்கொடையாக வழங்கினர்.

**“ படையணியினரால் உடையார்கட்டுப் பகுதியில் வசிக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஏழு மாணவர்களுக்கு காலணிகளை நன்கொடையாக வழங்கினர்**

682 ஆவது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் சமிந்த கலப்பத்தியின் பணிப்புரையின் பேரில், கட்டளை அதிகாரி மேஜர் டபிள்யூ.எம். டி.எஸ் திஸாநாயக்கவின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின்

## 14ஆம் ஆண்டு நினைவேந்தல்

சண்முகம் தவசீலன்

ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் பு. சத்தியமூர்த்தியின் 14 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் (12), முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்றது. ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்த இந்நிகழ்வில், அவரின் உருவப் படத்துக்கு சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.



ஊடகத்துறையில் 1990களில் இருந்து ஈடுபடத் தொடங்கிய சத்தியமூர்த்தி, 2009 பெப்ரவரி 12ஆம் திகதி முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியின் இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலில் சிக்கி, படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு

# தமிழர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல

## முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் மஜீத்

எம்.எம் அஸ்லம்

அதிகாரப் பகிர்வு, 13ஆவது திருத்தம் என்பன, தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தானது எனவும் அது முஸ்லிம் சமூகத்துக்கு பாதிப்பாக அமைந்து விடும் எனவும் தப்பபிப்பிராயம் பரப்பப்படுகிறது. ஆனால், இத்தகைய அதிகாரப்பகிர்வின் மூலம்தான், முஸ்லிம்களினது உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினருமான ஏ.எல் அப்துல் மஜீத் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு சாசனம், சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை முழுவதுமாக புறந்தள்ளி, சிங்கள பௌத்த மேலாண்மையை வலியுறுத்தி நின்றது. குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பில் இடம்பெற்றிருந்த செனட் சபை (மூதவை) இல்லாதொழிக்கப்பட்டதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகவும் சிங்கள மொழியை அரச கரும மொழியாகவும் பிரகடனம் செய்திருந்தது .

அக்குடியரசு சாசனத்தை, தமிழ் மக்கள் எதிர்த்து நின்றதுடன் அப்போது நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அமிர்தலிங்கம், பகிரங்கமாக அரசியலமைப்பை தீயிட்டுக் கொளுத்தினார். இதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அதுபோல், கடந்த புதன்கிழமை (08) பௌத்த பிக்குமார் பாராளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்டமாக சென்றதுடன், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தினர். அவர்களை பொலிஸார் கைது செய்ய முன்வரவில்லை. பொலிஸாரின் அச் செயல், நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளது போல் எண்ணத் தோன்றுகிறது.

1957ஆம் ஆண்டு, பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, ஆயிரக்கணக்கான பிக்குமார் பிரதமரின் இல்லத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகம் இருந்தனர். இதனால் வேறு வழியின்றி, அந்த ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டது



இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை, தோல்வியைத் தழுவிக் கொண்டது போல் மாகாண சபை முறைமையையும் தோல்வியடையச் செய்வதற்கு பௌத்த சிங்கள கடும் போக்குவாதிகள் முயன்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

13ஆவது திருத்தம் என்பதும் அதிகாரப்பகிர்வு என்பதும், தமிழ் மக்களுக்கே உரித்தான சொந்த விடயம் என முஸ்லிம் சமூகத்தில் பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு கிழக்குக்கு மாத்திரமன்றி அதற்கு வெளியே உள்ள 07 மாகாண சபைகளும் உள்ளன. குறிப்பாக, சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளையும், பிராந்திய அபிவிருத்தியையும் அவர்களது வாழ்விடங்களை உறுதிப்படுத்துவதும் அதில் தங்கியுள்ளது என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட முன்வர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



## சங்காபிஷேகம்

காரைதீவு விபுலானந்த சதுக்கத்தில் அமைந்துள்ள அரசடி ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சத சங்காபிஷேக பூசை, பாற்குடபவனியுடன் சங்காபிஷேக குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

வி.ரி சகாதேவராஜா

## “எமக்கான நீதி கிட்டுவதென்பது சாதாரண விடயமல்ல”

கண்கண்ட சாட்சிகள் இருந்தும் குமாரபுரம் கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு எதிரான தீர்ப்பே வழங்கப்பட்டுள்ளது என அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க. லவகுசராசா தெரிவித்தார். சனிக்கிழமை (11) இடம்பெற்ற குமாரபுரம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குமாரபுரம் கிராம மக்கள், தமது உறவுகளை படுகொலை செய்தவர்களுக்கு, தண்டனை வழங்க வேண்டும்; தங்களுக்கான நீதி வேண்டும் என்ற எண்ணத்துடன் மூதூர் நீதிமன்றம் ஊடாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். இந்த வழக்கானது மூதூர் நீதிமன்றம் தொடக்கம், அநுராதபுரம் மேல்நீதிமன்றம் வரை நடைபெற்றது. பல சவால்களுக்கு மத்தியில், வாக்குமூலங்களை பாதிக்கப்பட்ட மக்கள் வழங்கி வந்தார்கள்.

ஆனால், 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில், அநுராதபுரம் மேல்நீதிமன்றில் ஜுரி சபை ஊடாக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆறு முன்னாள் இராணுவ வீரர்களும் (பிணையில் இருந்தபோது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டதுடன், அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கையின் சட்ட ஆட்சியில் இருக்கக்கூடிய பக்கசார்பான நடவடிக்கை குமாரபுரம் கிராமத்துக்கு மாத்திரமல்ல, வடகிழக்கில் இடம்பெற்ற பல்லாயிரக்கணக்கான இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கும் இதேபோன்ற நிலைதான் ஏற்பட்டது. இலங்கையை பொறுத்தவரையில், எமக்கான நீதி கிட்டுவதென்பது, சாதாரண விடயமல்ல; எனவே, இவ்வாறான படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் வடகிழக்கு ரீதியாக ஒருங்கிணைந்து போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்றார்.

காதலர் தினத்தை ஒட்டி

## தனியார் கல்வி நிலையங்களுக்கு பூட்டு

ஹஸ்பர்

கிண்ணியா நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில், இன்று (14) அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் மூடுமாறு, கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம் நிவாஸ் அறிவித்துள்ளார்.

காதலர் தினத்தை ஒட்டி, அனைத்து தனியார் கல்வி நிலையங்களை பூட்டுமாறு கிண்ணியா வலயக் கல்வி அலுவலகம், ஜம்மியதுல் உலமா சபைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. காதலர் தினம் என்பதால், சமூக சீர்கேடுகளைத் தவிர்க்கவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக மேலும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விடுதலை போராட்ட தியாகிகள் நினைவு



க. விஜயரெத்தினம்

ஈழ விடுதலை போராட்டத்தில், தங்கள் உயிர்களை தியாகம் செய்து உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூரும் நிகழ்வு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஏற்பாட்டில் மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது. ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மண்டூர் அமைப்பாளர் க. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், திருக்கோவில், காரைதீவு, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இருந்து தியாகிகளின் உறவினர்கள், கலந்து கொண்டனர்.

## அடித்துக் கொலை

தீஷான் அஹமட்

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்குவேலி, புலியடிச்சோலை பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு சம்பவத்தில் தடியொன்றால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூதூர் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஆர். டபிள்யூ நதீஷா மதுவந்தி, கைகலப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். நேற்று முன்தினம் (12) மாலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில், கங்குவேலி, புளியடிச்சோலை பகுதியைச் சேர்ந்த கோகுலராசா வயது (48) என்பவர் உயிரிழந்துள்ளார். அத்தோடு குறித்த நபரை தாக்கி கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் 26 வயதுடைய சந்தேக நபரொருவரையும் மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# “நல்ல வருமானம்”

■ சுதத் எச்.எம்.ஹேவா

கடந்தவாரத்தில் சிவனொளிபாத மலைக்கு வருகைதந்த யாத்திரிகளின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தது. இதனால், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான ஹட்டன் டிப்போவுக்கு அந்தவாரத்தில் மட்டும் 127 இலட்சம் ரூபாய் வருமானமாக கிடைத்துள்ளது என டிப்போ அதிகாரி டப்ளியூ. ஜே.கே கீர்த்திரத்ன தெரிவித்தார்.

10ஆம்திகதி 38 இலட்சம் ரூபாயும், 11ஆம் திகதி 43 இலட்சம் ரூபாயும் 12ஆம் திகதியன்று 46 இலட்சம் ரூபாயும் வருமானமாக கிடைத்துள்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கடும் வெப்பத்தால் நீர் மட்டம் குறைவு

■ செ.தி.பெருமாள்



மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் கடந்த சில நாள்களாக நிலவிவருகிறது. இதனால் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த் தேக்கங்களில் ஒன்றான மவுஸ்சாக்கலை நீர்த் தேக்கதின் நீர் மட்டம் நேற்று (13) மதியம் அதன் கொள்ளளவை விட சுமார் 19 அடி குறைந்த நிலையில் உள்ளது.

இந்த நீர்த் தேக்கம் மூலம் கெனியோன், லக்ஷபான, பொல்பிட்டிய, நவ லக்ஷபான ஆகிய நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர் தேக்கம் இதுவாகும் என நீர் மின் நிலைய உயரதிகாரி தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 21 அடி குறைந்த நிலையில் உள்ளது. இந்த வரட்சி தொடருமானால் மின் வெட்டு ஏற்படும் அபாயத்தை இலங்கை வாழ் மக்கள் அனுபவிக்க நேரிடும் என அந்த அதிகாரி கூறினார்.

# பற்றைக்குள் இழுத்துச் சென்று துஷ்பிரயோகம்

■ சுமணசிறி குணதிலக்க

பிபில பொலிஸ் பிரிவில் தியகோபல கரகஹவெவை வசிப்பிடமாகக் கொண்ட 15 வயதான பாடசாலை மாணவியை, பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், 17 வயதான இளைஞன் நேற்று (13) கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மாணவி, இன்றைக்கு ஒரு மாதத்துக்கு முன்னர், தனியார் வகுப்புக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த போது, இடையில் வழிமறித்த அவ்விளைஞன், பற்றைக்காட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார் என செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவ்விளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வைத்திய பரிசோதனைக்காக மாணவி, பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், இளைஞனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



# கண்டி மாவட்டத்தில் மஞ்சள் உற்பத்தியாளர்கள் அவதி

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி மாவட்டத்தில் மஞ்சள் உற்பத்தி செய்த விவசாயிகள் தமது அறுவடையை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியாமல் தவிப்பதாக கவலை தெரிவித்தனர்.

கண்டி மாவட்டத்தில் 500 ஏக்கருக்கும் அதிகமாக இம்முறை மஞ்சள் செய்கை செய்துள்ளதாகவும் அதன் மூலம் கிடைத்த அறுவடையை ஒரு கிலோ கிராம் 50 ரூபாய்க்கு மட்டுமே விற்பனை செய்யக் கூடியதாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கண்டி மாவட்டத்தின் விவசாயிகள் வங்கிகளில் கடன் பெற்று இம்முறை விவசாயத்தில் ஈடுபட்ட போதும், தற்போது தமது அறுவடையை விற்பனை செய்துகொள்ள முடியவில்லை. இதனால், வங்கிக் கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதானவும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது மஞ்சள் உற்பத்தியை சில விவசாயிகள் அறுவடை செய்து வீடுகளில் வைத்து கொண்டுள்ளதாகவும் மேலும் சில விவசாயிகள் தமது உற்பத்தியை அறுவடை செய்யாமல் உள்ளதாகவும் அவர்கள் மேலும்தெரிவித்தனர்.

தமது மஞ்சள் உற்பத்தியை தகுந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் உதவாவிட்டால் எதிர்வரும் காலங்களில் மஞ்சள் உற்பத்தியில் ஈடு பட போவதில்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# “அதிவிசேட வெற்றி கிட்டும்”

■ ரஞ்சித் ராஜபக்ஷ

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பல சபைகளை கைப்பற்றி அதிவிசேட வெற்றியை ஈட்டும் என காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச சபைக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக, ஹட்டன், டிக்கோயா, நோர்வூட், பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுத்த பிரசாரக் கூட்டங்களின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பெருந்தோட்ட மக்களுக்கு விசேட சேவைகளைச் செய்துள்ளது. ஆகையால், காங்கிரஸின் மீது மக்களுக்கு நல்ல அபிப்பிராயம் உள்ளது. அதனை இம்முறை தேர்தலில் மக்கள் காண்பிப்பார்கள். அதனூடாக அதிவிசேட வெற்றியை காங்கிரஸ் பெற்றுக்கொள்ளும்.

காங்கிரஸூக்கு கிடைத்திருக்கும் அமைச்சின் ஊடாக, பெருந்தோட்டங்களுக்கு எதிர்காலத்தில் சேவைகளைச் செய்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களை கலைக்காமல் தேர்தலுக்கு அறிவிப்பு விடுத்துள்ளமை தொடர்பில் அமைச்சின் செயலாளரே பதிலளிக்கவேண்டும் என்றார்.



# மொட்டு வேட்பாளரின் வீட்டுக்குள் செடி

■ ஷேன் செனவிரத்ன



கடுகண்ணாவை, ரஜவத்தையில் உள்ள தன்னுடைய வீட்டுத் தோட்டத்தில் கஞ்சா செடியை வளர்த்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், கடுகண்ணாவை நகர சபைக்கு தாமரைமொட்டு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தபால் நிலைய பொறுப்பதிகாரியாக சேவையாற்றிய அரச ஊழியர் எனத் தெரிவித்த பொலிஸார், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டிடுகின்றார். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

# கள்ள மனைவி கொலை: கான்ஸ்டபிள் மாயம்

■ சுமணசிறி குணத்திலக்க

தன்னுடைய கள்ள மனைவியை, கூரிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்த பொலிஸ் கான்ஸ்டபிள், பிரதேசத்தில் இருந்து தலைமறைவாகியுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், அவரை தேடி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றனர்.

இந்தச் சம்பவம், மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெதிகும்பர எனும் இடத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தாயான 45 வயதான பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பதுளையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் அந்த பெண்ணுக்கும் இடையில் 15 வருடங்களாக கூடாத தொடர்பு இருந்துள்ளது.

முதலாவது திருமணத்தில் இருந்து விட்டுப்பிரிந்த அந்தப் பெண், பொலிஸ் கான்ஸ்டபிளுடன் கூடாத தொடர்பில் இருந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை, அந்தப் பெண்ணை பார்ப்பதற்கு வந்துள்ளார். இருவருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

கடும் கோபமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள், வீட்டிலிருந்த கத்தியை எடுத்து, அப்பெண்ணின் தலையிலும் நெஞ்சிலும் தாக்கியுள்ளார். வீட்டு வாசலில் மயங்கி விழுந்த அந்தப் பெண்ணுக்கு கடுமையான இரத்தப் போக்கு ஏற்பட்டதால் உயிரிழந்துவிட்டார் என்று விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவல்களின் பிரகாரம், விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# பேஸ்புக் நண்பன் திருட்டில் சிக்கினார்

■ நவி

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கபரகலைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைதருகின்றனர்.

பேஸ்புக் ஊடாக பழகி நண்பர்களான இருவர், வத்தளை மற்றும் பலாங்கொடை ஆகிய பகுதிகளில் இருந்து அங்கு வருகைதந்துள்ளனர்.

கபரகலை பகுதியை சுற்றி பார்வையிட செல்வதற்கு முன்னர் அங்கு கூடாரம் ஒன்றை அமைத்து, அவர்களுடைய முக்கியமான பொருட்களை அங்கு வைத்து விட்டு சுற்றிப் பார்க்க சென்றுள்ளனர்,

திரும்பி வந்து பார்த்தபோது, வத்தளைச் சேர்ந்தவரின் தங்க ஆபரணங்கள் களவாடப்பட்டிருந்தன.

பல இடங்களில் தேடி பார்த்தபோதும் கிடைக்கவில்லை. இதுதொடர்பில், குறுந்துவத்த பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பலாங்கொடை பகுதியில் இருந்து வந்தவரின் பாதணிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தங்கம் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட 25 வயதுடைய சந்தேக நபரை நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தின் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை குறுந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சித்தி

■ நடராஜா மலர்வேந்தன்



மஹியங்கனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட ப/பங்கரகம்மன முஸ்லிம் வித்தியாலய மாணவி எஸ்.எப் அமானியா 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரை பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்துகின்றனர்.

# வெற்றிக்குப் பின் குப்பைக்குத் தீர்வு

■ சுதத் எச்.எம்.ஹேவா



இம்முறை நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தான் அதிகாரத்துக்கு வந்தால், ஹட்டன் நகரின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கும் குப்பை பிரச்சினைக்குத் அதிரடியாக தீர்வு காண்பேன் என ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் வேட்பாளரான வைத்தியர் அழமுத்து நந்தகுமார் தெரிவித்தார்.

தன்னுடைய தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து, அறிஞர்களுடன் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எம்முடைய பிரதேசத்தில் ஆங்காங்கே கொட்டப்படும் குப்பைகளால் பல்வேறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

சூழலுக்கு பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் சுகாதாரத்துக்கும் சீர்கேடுகளை குப்பைகள் விளைவிக்கின்றன. அந்த நிலைமை தொடர்பில் கூடுதல் கவனத்தை செலுத்தியுள்ளேன்.

குப்பைகள் மட்டுமன்றி, அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வீதிகள் சேதமடைந்துள்ளன. அவற்றை செப்பனிட்டு, வீதித்தொகுதியை ஏற்படுத்துவதே முக்கியமாகும்.

இவையெல்லாம் நகர சபையின் ஊடாக முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகளாகும். இம்முறை அதிகாரத்துக்கு வந்தால் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு நிரந்த தீர்வை பெற்றுக்கொடுப்பேன். அதிலும் முக்கியமாக குப்பை பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றார்.



# 17 வருடங்களுக்கு பின் கும்பாபிஷேகம்

■ நவி

புப்புரஸ்ஸ டேசன் தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் 17 வருடங்களின் பின்னர், ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்றது.

இதில், அதிகளவான பக்த அடியார்கள் கலந்து கொண்டு வழிப்பாட்டில் ஈடுபட்டனர். மேள வாத்தியங்கள், குடமுழுக்க அபிஷேகம், மஹாபிஷேகம், மஹேஸ்வர பூஜை, தீபாராதனைகள் இடம்பெற்றன.

பூஜைகளை தொடர்ந்து பக்த அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.



# சும்மா இருந்த வாய்க்கு கொஞ்சம் அவல் கொடுத்த 'நெடுமாறன்'

இறுதி யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்களுக்கும் நடந்தது என்னவென அறிவதற்கு தென்னிலங்கையில் ஒரு தரப்பினர் ஆவலாய் இருந்தனர்.

அந்த யுத்தத்தில் உறவுகளை பறிகொடுத்தவர்களும், ஒப்படைக்கப்பட்ட தங்களுடைய பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் என்ன நடந்தது என்பது குறித்தும் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னுமே தேடிக்கொண்டுதான் இருக்கின்றனர்.

எனினும், சுனாமி பேரலையின் போது, விடுதலைப்புலிகளின் தலைவர் மரணமடைந்துவிட்டார் என தென்னிலங்கையில் ஒரு சில ஊடகங்கள் தலைப்புச் செய்தியாக்கி, அவருக்கான சவப்பெட்டி தென்னிலங்கையில் இருந்து கொண்டு செல்லப்பட்டது என்றெல்லாம் தலைப்பிட்டிருந்தன.

இறுதி யுத்தத்தில் அவ்வியக்கத்தின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதை இலங்கை இராணுவமும் அரசாங்கமும் திட்டவட்டமாக அறிவித்திருந்தது. எந்தவொரு தலைவரும் கடல்வழியாக தப்பிச்செல்லவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தது.

இந்நிலையில்தான், தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் திங்கட்கிழமை (13) செய்தியாளர்களை சந்தித்த உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் "தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நலத்துடன் உள்ளார்" எனக்கூறி, ஏனைய விடயங்களை நேரம் வரும்போது சொல்வதாக தெரிவித்துள்ளார்.

அக்கூற்றை முற்றாக மறுத்த இலங்கை இராணுவம், 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி இடம்பெற்ற இறுதிக்கட்ட போரில் பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என அறிவித்துள்ளது. அவ்வியகத்தின் முக்கிய தலைவர்களாக இருந்த கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், புலிகள் அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தயாமாஸ்டர் ஆகிய இருவருமே பிரபாகரனின் சடலத்தை அடையாளம் காட்டினர் என்பது பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும்.

இவ்வாறான நிலையிலும், 13ஆவது திருத்தத்துக்கு எதிரான கோஷங்கள் வலுப்பெற்றுள்ள வேளையில், பிரபாகரன் தொடர்பிலான நெடுமாறனின் கூற்று, 'சும்மா இருந்த வாய்க்கு கொஞ்சம் அவல் கிடைத்த மாதிரி'யான செயலாகும்.

13ஆவது திருத்தத்தை அமல்படுத்தினால், தமிழீழம் மலருமென பேரினவாதிகள் கருத்துரைத்து வரும் நிலையில், பிரபாகரனின் செய்தி, 'எரியும் தீயிக்கும் எண்ணெய் வார்த்ததைப் போல' இருக்கும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இது, இனங்களுக்கு இடையில் சந்தேக பார்வையை தூண்டும். சிறுபான்மையின மக்களுக்கு அதிகாரம் கிடைக்கக்கூடாதென நினைக்கும் தென்னிலங்கை பேரினவாத அரசியல்வாதிகளின் வாய்களுக்கு நல்ல 'அவல்' கிடைத்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசாரம் ஓரளவுக்கு சூடுபிடித்திருக்கும் நிலையில், 13ஆவது திருத்தமும், பிரபாகரன் விவகாரமும், சிங்கள மக்களிடத்தில் பேசும் பொருளாகி வருகின்றது. அதையே தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் பேரினவாத அரசியல்வாதிகள், வாக்குவங்கிகளை நிரப்பிக்கொள்ள முயல்வர்.

ஆக, பழமொழிகளில் ஒன்றான, 'சும்மா இருந்த வாய்க்கு கொஞ்சம் அவல் கொடுத்த மாதிரி', பிரபாகரன் விடயத்தில் நெடுமாறன் அவசரப்பட்டுவிட்டார் என்பதே எமது அவதானிப்பாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

தங்களை மாற்றிக்கொள்ளாமல் கண்டபடி வாழ்பவர்கள், மற்றவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள்.

செய்த தவறுகளை எவருக்கும் தெரியாதபடி மறைக்கவே, தங்களைப் புத்திசாலிகள்போலக் காட்டிக்கொள்கின்றார்கள்.

பலமற்ற அறிவுகுறைந்தவர்கள்தான், தங்களை வெளிக்காட்டி பெயரெடுக்க முனைகிறார்கள். ஆனால், சுற்றியிருக்கும் மக்களுக்கு, இவர்களைப் பற்றி எல்லாமே தெரியும்.

உண்மையான குணாம்சத்தை பலவீனமானவர்கள் காட்டாமல் விட்டாலும், அவர்கள் நடத்தைகள் காட்டிவிடும். கோடானுகோடி மக்கள் வசிக்கும் பூமியில், யார், எவர் என்று அராய்ச்சி செய்வதே வேடிக்கையானது.

தன்னடக்கம் உள்ளவர்கள், எவரையும் மதிப்பார்கள். அன்பை என்றும் நாடுபவர்கள், தேவையற்ற ஆய்வுகளைச் செய்யமாட்டார்கள். இவர்கள் எவராயினும் பிறர் தவறுகளைத் தேடாமல், நன்மைகளை மட்டுமே செய்துவருவார்கள்.

உலகில் எல்லோருமே சந்தோசமாக வாழ முடியும். இதற்கு மனப்பக்குவம் வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மேற்கத்திய கலாசார சிந்தனையின் தாக்கம்



நடராஜன் ஹரன்

மேற்கத்திய உலகில் கலாசாரத்தின் சிந்தனையால் உருவான தினமே காதலர் தினமாகும்.

இரவு 12 மணிக்கு, காதலர்கள் ஒன்று கூடி முத்தமிடுவதும் பூச்செண்டுகளை பறிமாறுவதும் பரிசில்களைக் கொடுப்பதும் உல்லாசமாக ஊர்சுற்றுவதும் மிகப்பெரிய நாகரிகம் என்ற எண்ணம் சமூகத்தில் பரவிவருகின்றது. நாளொருவண்ணம், பொழுதொரு மேனியாக ஆண், பெண் உறவு (காதலர் - காதலி உறவு) மாறிக்கொண்டே இருக்கும்.

தந்தை தினம் வருகிறது; பல பேர்களுக்கு அது வந்து போவதே தெரிவதில்லை. தாய் தினம் வருகிறது; கொஞ்சம் தொலைக்காட்சி மூலமாய் தெரிந்தாலும் 'அம்மாவென்றழைகாத உயிரில்லையே' என்பது போல், ஒரிரண்டு பாட்டுகளுடன் முடிவடைகின்றன. நம் நாட்டின் சுதந்திரத்துக்காக உயிரை அர்ப்பணித்த பல தியாகிகளின் பிறந்த நாள்கள் பலருக்கு நினைவு வருவதில்லை;

ஆனால், இந்தக் காதலர் தினம் மட்டும், பத்துப்பதினைந்து நாள்கள் முன்பாகவே, சூடு பிடிக்கத் தொடங்கி, ஒரு கலக்கல் கலக்கி விடுகிறது. அது ஏன்? ஏழு வயது சிறுவனும் கூட, இதைப்பற்றித்தெரிந்து வைத்திருக்கிறான்.

ஒரு சிறுமி தன் தாயிடம், தனக்கு ஒரு 'பெல்ட்' வாங்கும்படி அடம் பிடித்தாள் "உனக்கு எதற்கு பெல்ட்? உன் பிட்ரெஸ்ஸுக்கு பெல்ட் எப்படி தேவையா என்ன?" என்று அவள் அம்மா கேட்டபோது, "எனக்கில்லையம்மா என் போய் பிரண்டுக்கு, காதலர் தினத்தில் கொடுக்கணும்" என்றாள்.

அன்புடன் பரிசு கொடுப்பதில் தவறொன்றுமில்லை. ஆனாலும் ஒரு வரையறையை, நெறிமுறையை மீறும்போது, அங்கு அமிர்தமும் விசமாகிவிடுகிறது. சிறுமியைச் சொல்லிக்குற்றமில்லை. அவள் வளரும் சூழ்நிலை, அவளைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து, இது போன்ற நாகரிக சிந்தனையை உண்டாக்கி விடுகிறது.

நம் நாடு, பெற்றோர்களைத் தெய்வமாக மதிக்கும் நாடு. தாய் - தந்தையைப் பராமரித்து, கடைசிவரை அவர்களைப் பாசத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்களின் கடமை. ஆகையால், தனியாகத் தாய், தந்தை தினம் தேவையே இல்லை. நம் மனத்தில் தினமும் அவர்கள் குடியிருக்கிறார்கள். மேல் நாட்டில் மகன், மகள் 16 வயது வந்தால், தனியாக குடி போகிறார்கள். அவர்கள் சுதந்திரத்தில், எவரும் தலையிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் இந்தத் தந்தை தினம், தாய் தினம் என்று அவர்களுக்காக ஒரு நாள் ஒதுக்குகிறார்கள்.

இந்தத் தினம், அவர்கள் தமது அன்பை வெளிப்படுத்தும் தினமாகும். ஆனால், நாம் காலம்காமாகப் கட்டிக்காத்து, பாதுகாத்துவரும் எமது பண்பாடு, பாரம்பரியம், ஒழுக்க விழுமியங்களைக் காற்றில் பறக்கவிடும் தினம் அல்ல.

இந்தக் காதலர் தினத்தின் அர்த்தம், நம் நாட்டில் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறதோ என்ற ஐயம் மனதிலே உண்டாகிறது. இந்தப் புனித காதல் பிறந்த கதையை பார்த்தால், ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொள்ள முடியும்.

மூன்றாம் நூற்றாண்டில் கிளாடியஸ் என்ற கொடிய அரசன், தன் சேனையில் நிறையப் பேரைச் சேர்ப்பதற்காக, ஒரு சட்டம் கொண்டு வந்தான். அதாவது, கல்யாணம் ஆகாதவர்கள்தான் சேனையில் சேர முடியும். அவரிடம் இருந்த வலன்டைன் என்பவருக்கு இந்தச் சட்டம் பிடிக்கவில்லை. அவர் அரசனுக்குத் தெரியாமல் பல காதலர்களுக்குத் திருமணம் செய்துவைத்தார்.

இது அரசனுக்குத் தெரிந்து, வலன்டைன் கைதுசெய்யப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டது. எல்லோரும் கருணையுடனும் பாசத்துடனும் அவரை வந்து பார்த்தார்கள். சிறைச்சாலை அதிகாரியின் சிறு மகள், அவர் மேல் மிகவும் அன்பு காட்டினாள். பெப்ரவரி 14ஆம் திகதி வலன்டைனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும் தினம். அன்று அந்தப் பெண்ணுக்கு சிறுகுறிப்பு எழுதிவைத்துவிட்டு, தண்டனையை ஏற்றுக்கொண்டார்.

அந்த நாளிலிருந்து, இந்தக் காதலர்தினம் வலன்டைன் ஞாபகமாக நினைவுகூரப்படுகின்றது. ஒரு பூவின் மூலமாகவோ, பொருட்களின் மூலமாகவோ இதை வெளிப்படுத்துகின்றனர்.

உலகம்தோன்றிய காலம் முதல் இன்று வரை, பெண்ணின் கற்பைப் பற்றித் தான் இச்சமூகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. கற்புக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் ஏதாவது செயற்பாடுகள், அல்லது பேச்சுகள் இருந்தால், அது பெண்ணின் வாழ்க்கையே கேள்விக்குறியாக்கிவிடும்.

கற்பு என்பது புனிதமானது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. இருவரும் கற்பை பாதுகாக்க வேண்டும் என அனைத்து மதம்களும் கூறுகின்றன. நமது சமூகத்தின் ஒழுக்கநெறியும் இதைத்தான் வலியுறுத்துகின்றது. அந்தநாளில், காதலர்கள் மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சொக்லேட், பரிசு என பரிமாறிக்கொள்வது நல்லது.

எண்ணங்களையும், ஆசைகளையும், கனவுகளையும், தாபங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகர்ந்துகொள்ள ஒரு காதலி அல்லது காதலன் கிடைத்துவிட்டால், வாழ்க்கை முழுமையாகிவிடும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கே காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடமையாவதும், உரிமை கொண்டாடுவதும், ஆளுமை செலுத்துவதும் அல்ல காதல்; இரு உள்ளங்கள் சங்கமிக்கும் நிகழ்வு அது!

உண்மையில், காதலுக்காக சுயநலத்தையும் அகந்தையையும் இழப்பதில்தான் வாழ்க்கையின் இரகசியமே அடங்கியிருக்கிறது. காதலின் ஆச்சரியங்களில் ஒன்று சரணாகதி. எல்லாவற்றையும் காதலுக்கு அர்ப்பணிக்கும்போது, காதலர்கள் புதுப்பிறவி எடுக்கிறார்கள். இதைப் புரிந்தவர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள். தோற்றவர்கள் சபிக்கிறார்கள்.

ஓர் ஆணும் பெண்ணும் வாழ்க்கை பந்தம் ஏற்படுத்தி, ஒருவருக்கு ஒருவர் என வாழ, மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட, அன்பின் அடிப்படையில் உருவான பந்தம் தான் காதல். ஆனால், இனக்கிளர்ச்சியை காதல் என உள்ளர்த்தம் செய்து கொண்டு, இளைய சமுதாயம் பயணித்து வருகிறது. தமக்கு 'போய் பிரண்ட்', 'கேர்ள் பிரண்ட்' இல்லையென்றால், நண்பர்கள் மத்தியில் சமூக அங்கிகாரம் கிடைக்காதோ என்ற ஏக்கத்தில், காதல் உருவாகி வளர்ந்து வருகிறது. இது திருமணம் வரை செல்வதில்லை. ஆபத்தில்லாமல் இருக்கும் வரை இக்காதலை கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். கதையில், கவிதையில், சினிமாவில் ரசிக்க மட்டுமே இவ்வகை காதல் இடங்கொடுக்கும். இவை வாழ்வின் கனவுக் காட்சிகள்; ஆனால், வாழ்க்கைக்கு உதவாது.

வாழ்க்கை என்பது யதார்த்தமானது. காதல் உணர்வை இயற்கை அளித்திருந்தாலும், அறிவைக் கொண்டு ஆராய்ந்து வாழ்க்கை முழுவதும் நிலையான இன்பம் துய்க்க ஏற்றவாறு, முறைப்படுத்திக் கொள்வது அவசியம். ஆணோ, பெண்ணோ பொருளாதார சுதந்திரம் பெற்ற பின்னர் காதலியுங்கள். அப்போது உங்களுக்கு ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

திருமணம் ஒரு முடிவு அல்ல; ஆரம்பம் என்கிற நம்பிக்கை வந்தால் திருமணத்துக்குப் பிறகும் காதலை தொடர முடியும். திருமணத்துக்கு முந்தைய காதலும், பிந்தைய காதலும் ஒன்று என்கிற தவறான எண்ணம்தான் பிரச்சினைகளுக்குக் காரணம். தற்போதுள்ள பணிச்சுமை, பொருளாதார நெருக்கடி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லாமை, பரஸ்பர புரிந்துணர்வு இன்மை போன்றவைதான் காதல் மணமுறிவுக்கு அடிப்படை காரணங்களாகும். கணவன், மனைவியான பிறகு தங்களின் மன அழுத்தங்களையும் வெறுப்புகளையும் வெளியேற்றும் வடிகாலாக ஒருவரையொருவர் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இவ்வாறு செய்வது காதலுக்கு தரும் மரியாதை அல்ல. சுதந்திரமான 'ரொமான்டிக்' காதல் வேறு. இல்லறத்தில் புதுப்பிறவி எடுக்கும் காதல் வேறு என்பதைப் புரிந்துகொண்டாலே, உங்கள் வாழ்க்கையில் குளிர்ச்சியான தென்றல் வீசும். நம் நாட்டு கலாசாரம், காதலைப் புனிதமாக மதிக்கிறது. இலை மறைவு; தலை மறைவு என்பார்கள். ஆரோக்கியமான உண்மையான அன்பை, தன்னலமில்லாமல் செலுத்திக் கொண்டாட காதலைவிடச் சிறந்தது வேறில்லை.

இறைவனும் அன்புக்கு அடிமை. எனவே எதிர்ப்பார்ப்பு இல்லாத அன்பை வாரி வாரி வழங்குவோம்.

## கடிதங்கள்

### பத்தினி புரம்:

# குப்பை மேடு பிரச்சினையை தீர்க்குமாறு கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின், தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட பாலம்போட்டாறு பத்தினிபுரம் மக்களின் தீர்த்து வைக்கப்படாத குப்பை மேடு பிரச்சினையை தீர்த்து வைக்குமாறு, அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் அமைந்திருக்கும் பாலம்போட்டாறு குப்பைமேட்டுக்கு, பல இடங்களிலிருந்து கொண்டுவரும் குப்பைகளை, வீதியோரத்தில் கொட்டுவதால், யானைகளில் தொந்தரவுகள் அதிகரித்து வருவதோடு, துர்நாற்றம் வீசுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை தொடர்பாக, பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "பாலம்போட்டாறு பத்தினிபுரம் பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் குப்பை மேடு அமைந்துள்ளது. இதனால் வீசுகின்ற துர்நாற்றம் காரணமாக, பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் அப்பகுதியில் வசிப்போரும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள். குப்பை மேட்டிலிருந்து, பத்தினிபுர கிராமத்துக்கு 200 மீட்டர் தூரம் உள்ளது. பகல் நேரங்களில் வரும் காட்டு யானைகள், இரவு நேரங்களில் கிராமத்துக்குள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. பல தடவைகள் பிரதேச சபைக்கு அறிவித்தும், இதுவரைக்கும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை" என்றார்.

எனவே, இப்பகுதி மக்களின் நலன் கருதி, விரைவில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பாதிக்கப்படும் பத்தினிபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– எப். முபாரக்

இந்தியா

# மயிரிழையில் சிறுமியின் உயிரை காப்பாற்றிய நாய்கள்

துருக்கி- சிரியா எல்லையில் கடந்த 6 ஆம் திகதி சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டது.

இதில் இருநாடுகளையும் சேர்ந்த சுமார் 33,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகளை



மேற்கொள்வதற்காக இந்திய மீட்புக்குழுவினர் அண்மையில் துருக்கி சென்றிருந்தனர்.

இதன்போது மீட்புக் குழுவினருடன் ஜூலி மற்றும் ரோமியோ என்ற இரு மோப்ப நாய்களும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த இரு மோப்ப நாய்களும் நூர்தாகியில், இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருந்த 6 வயதான சிறுமியொருவரைக் காப்பாற்றியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

காஷ்மீர்



## வட்ஸ் அப்பில் பிரசவம்

காஷ்மீரில் குப்வாரா மாவட்டத்தில் அண்மைக்காலமாகக் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகின்றது.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியில் உள்ள சுகாதார நிலையத்தில் கர்ப்பிணி ஒருவர் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் அவரது பிரசவத்தில் சிக்கல் ஏற்பட்டதால் அவரை கிரால்போரா வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் அப்பகுதியில் நிலவி வரும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக வீதிவழியாகவோ, ஹெலிகொப்டர் மூலமாகவோ அக் கர்ப்பிணியைக் குறித்த வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் செய்வதறியாது திகைத்த ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்கள், இது குறித்து கிரால்போரா வைத்திய சாலை மகப்பேறு வைத்தியர் பர்வைசுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து அவர் வட்ஸ்அப் ‘வீடியோ கோல்’ மூலம் ஆரம்ப சுகாதார நிலைய வைத்தியரான அர்சாத் சோபிக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ராய்ச்சூர்

## மனைவியால் இரு மகன்களைக் கொன்ற தந்தை

ராய்ச்சூரில், மனைவி மீதான ஆத்திரத்தில் தனது இரு மகன்களை தந்தையொருவர் கழுத்தை நெரித்துக் கொலை செய்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராய்ச்சூர் மாவட்டம், ஜக்லேரதொட்டி கிராமத்தில் வசித்து வந்தவர் லிங்கண்ணா. கூலித்தொழிலாளியான இவருக்கு 5, 3 ஆகிய வயதுகளில் இரு மகன்கள் உள்ளனர்.

இந்நிலையில் அண்மைக்காலமாக லிங்கண்ணாவுக்கு, அவரது மனைவியின் நடத்தையில் சந்தேகம் இருந்து வந்துள்ளதாகவும், இதனால் இருவருக்கும் இடையே அடிக்கடி வாக்குவாதம் ஏற்பட்டு வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கோபமடைந்த அவரது மனைவி, தனது மகன்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு தன்னுடைய பெற்றோரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் தனது மாமியாரின் வீட்டுக்குச்



சென்ற லிங்கண்ணா, தனது மனைவியைச் சந்தித்து தன்னுடன் சேர்ந்து வாழ வருமாறு அழைத்துள்ளார்.


எனினும் அதற்கு அவரது மனைவி மறுப்பு தெரிவிக்கவே, கோபமடைந்த லிங்கண்ணா தனது இரு மகன்களையும் அழைத்துக் கொண்டு தன்னுடைய வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் மனைவியை நினைத்து மன உளைச்சலுக்கு உள்ளான அவர், நேற்று முன்தினம் தனது இரு மகன்களையும் ஆத்திரத்தில் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார்.

பின்னர் அங்கிருந்து தப்பி ஓட முயன்றுள்ள நிலையில் இதைக்கண்ட அக்கம்பக்கத்தினர் லிங்கண்ணாவை மடக்கிப்பிடித்துப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசம்

## தள்ளு வண்டியில் தந்தையைத் தள்ளி சென்ற சிறுவன்



சிகிச்சைக்காகத் தள்ளு வண்டியில் தந்தையை வைத்துத் தள்ளிச் சென்ற சிறுவனின் வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

மத்திய பிரதேசத்தில் சிங்ராவ்லி மாவட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று அரச அம்புலன்ஸ் வண்டிக்காகக் காத்திருந்த குறித்த சிறுவன், வண்டி வரத் தாமதமானதால் சுமார் 3 கீலோ மீற்றர் தொலைவில் உள்ள வைத்தியசாலைக்குத் தனது தந்தையைத் தள்ளு வண்டியில் வைத்துச் சென்றுள்ளான்.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி மக்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள அதே சமயம், அரச அம்புலன்ஸ் சேவை குறித்து மக்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

கேரளா

## பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த பொலிஸ் அதிகாரி

கேரள மாநிலம், திருச்சூர் அருகேயுள்ள பொலிஸ் முகாமொன்றில் பாலக்காட்டை சேர்ந்த ஸ்ரீராஜ் என்பவர் பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றி வந்துள்ளார்.

இவர் பேஸ்புக் மூலமாக காசர்கோட்டை சேர்ந்த 32 வயதான பெண் ஒருவருடன் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் நாளடைவில் குறித்த பெண்ணிடம் ‘அவரைக் காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாகவும்’ தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிய அப் பெண், அடிக்கடி ஸ்ரீராஜுனுடன் வீடியோ கோலில் உரையாடி வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் குறித்த பெண்ணை விடுதியொன்றுக்கு



**“ பெண்ணை விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்ற ஸ்ரீராஜ், அவரிடம் ஆசை வார்த்தை கூறி அவரைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்**

அழைத்துச் சென்ற ஸ்ரீராஜ், அவரிடம் ஆசை வார்த்தை கூறி அவரைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

பின்னர் அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றி வந்துள்ளார்.

இதுகுறித்து அந்த பெண் அளித்த புகாரின்பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து ஸ்ரீராஜைக் கைது செய்துள்ளனர்.

ஜார்க்கண்ட்

## மனைவியை கொன்று புதைத்த நபர் கைது

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மனைவியை கொன்று புதைத்து விட்டு காணவில்லை என்று நாடகமாடிய நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கிரிதிஹ் மாவட்டத்தைச் சேர்ந்த மனிஷ் பரன்வால். இவர் 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தனது மனைவியை காணவில்லை, எனவும் அவர் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விசாரணை



நடத்தி வந்தனர்.

இந்நிலையில் இது தொடர்பாக மனிஷிடம் விசாரணை மேற்கொண்டதில், அவரே தனது மனைவியை கொன்றது தெரியவந்துள்ளது. மனைவியைக் கொன்று தனது நண்பரின் வீட்டில் உடலை புதைத்ததாக அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இதையடுத்து பொலிஸார் மனிஷை கைது செய்தனர்.

உடலின் பாகங்களை சம்பவ இடத்திலிருந்து மீட்ட பொலிஸார் டி.என்.ஏ பரிசோதனை செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தக் கொலையில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

# வேற லெவல்

நம்ம லாஸ்லியாவா இது? என்று வியக்கும் அளவுக்கு புகைப்படங்களை இணையத்தளங்களில் பகிர்ந்துள்ளார் லாஸ்லியா, டைட் டாப்பில் வேற லெவல் போட்டோஷூட் என்று ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.





## ‘பதான்’ வசூல் அள்ளுகிறது

ஷாருக்கானின் ‘பதான்’ திரைப்படம் உலக அளவில் ரூ.924 கோடியை வசூலித்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

ஷாருக்கான், தீபிகா படுகோன், ஜான் ஆபிரஹாம் நடித்து கடந்த 25-ம் தேதி வெளியான இந்திப் படம், ‘பதான்’. இப்படத்தை சித்தார்த் ஆனந்த் இயக்கியுள்ளார். ‘பேஷரம் ரங்’ பாடல் காட்சியில் தீபிகா அணிந்திருந்த காவி பிகினி, சர்ச்சையை ஏற்படுத்தியது. இப்படத்துக்கும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்புகளை மீறி ‘பதான்’ வசூலில் சாதனைப் படைத்து வருகிறது. 4 ஆண்டுகளுக்குப் பிறகு ஷாருக்கான் நடித்த படம் என்பதால், ரசிகர்கள் தியேட்டரில் குவிந்து வருகின்றனர்.




## கங்கனா ரனாவத் புகழாரம்

‘சந்திரமுகி’ படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் இரண்டாம் பாகத்தை இயக்குநர் பி.வாசு இயக்குகிறார். இதில் நாயகனாக ராகவா லாரன்ஸ் நடிக்க, பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத் நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார்.

வடிவேலு முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்நிலையில் பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத், கடந்த 2019-ம் ஆண்டு ஜோதிகா பேசிய காணொலியை மேற்கோள் காட்டி ட்வீட் ஒன்றை பதிவிட்டுள்ளார்.

சந்திரமுகி படத்தில் ஜோதிகாவின் நடிப்பு வியப்பை தரக்கூடியது; அதுபோல் நடிப்பது சாத்தியமற்றது என்று பாலிவுட் நடிகை கங்கனா ரனாவத் தெரிவித்துள்ளார்.



## ‘லியோ’ லீக்

வாரிசு திரைப்படத்தை தொடர்ந்து நடிகர் விஜய் லோகேஷ் கனகராஜ் இயக்கும் ‘லியோ’ என்ற புதிய படத்தில் நடித்து வருகிறார். இந்த கூட்டணியில் ஏற்கனவே ‘மாஸ்டர்’ படம் வெளியாகி பெரிய வெற்றியைப் பெற்றது.

இந்த நிலையில் ‘லியோ’ படத்தின் டைட்டில் புரோமோ காட்சி அண்மையில் வெளியிடப்பட்டது. இது ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்ற நிலையில், அந்த புரோமோவில் இடம்பெற்ற பாடல் பலரையும் கவர்ந்தது.

இப்படத்தின் படப்பிடிப்பிற்காக சமீபத்தில் ‘லியோ’ படக்குழு காஷ்மீருக்கு சென்றது. காஷ்மீரில் லியோ படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் லியோ படத்தின் காட்சி இணைத்தில் லீக் ஆகியுள்ளது. இதனால் படக்குழு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## “இது உண்மையாக இருந்தால் நன்றாகத்தான் இருக்கும்”

5 நகரங்களில் 5 சொகுசு அடுக்குமாடி குடியிருப்புகள் வைத்துள்ளதாக வந்த செய்திக்கு மறுப்பு தெரிவித்துள்ள ராஷ்மிகா, ‘இது உண்மையாக ஆசைப்படுகிறேன்’ என தெரிவித்துள்ளார்.

நடிகை ராஷ்மிகா, ஹைதராபாத், கோவா, மும்பை, கூர்க் மற்றும் பெங்களூரு ஆகிய நகரங்களில் விலை உயர்ந்த அடுக்குமாடி சொகுசு குடியிருப்புகளை வாங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகின. அதற்கு மறுப்பு தெரிவித்துள்ள அவர், “இதுபோன்ற வதந்திகளை யார் உருவாக்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அனைத்தும் உண்மையாக இருந்தால் நன்றாக இருக்கும்” என்று பதிலளித்துள்ளார்.



## “இந்திய திரைப்படங்களை ரசிக்கிறேன்”

“இந்திய திரைப்படங்களை ரசிக்கிறேன். எனது திரைப்படங்களில் பாடல்கள் மற்றும் நடனக் காட்சிகள் இல்லாததே இந்திய படங்களுக்கும் எனது படங்களுக்குமான வித்தியாசம்” என ஹாலிவுட் இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன் தெரிவித்துள்ளார்.

டைட்டானிக் திரைப்படம் வெளியாகி 25 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில், உலகம் முழுவதும் 3டி முறையில் அப்படம் மறுவெளியீடு செய்யப்பட்டு வருகிறது, இந்த நிலையில் பாம்பே டைம்ஸ் நிறுவனத்திற்கு நேர்காணல் ஒன்றை அளித்துள்ள ஜேம்ஸ் கேமரூனிடம் ”உங்கள் திரைப்படத்திற்கும் இந்திய திரைப்படங்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?” என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜேம்ஸ் கேமரூன், “எனது திரைப்படங்களில் பாடல்கள் மற்றும் நடனக்காட்சிகள் இல்லாததே இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்’’ என்றார். குடும்பம், நண்பர்கள், சுற்றத்தார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை மையாக வைத்து எடுக்கப்படும் இந்திய திரைப்படங்களை தான் ரசிப்பதாகவும், ராஜமௌலி இயக்கத்தில் வெளியான ‘ஆர்ஆர்ஆர்’ திரைப்படத்தை பார்த்தது வியந்ததாகவும் ஜேம்ஸ் கேமரூன் தெரிவித்துள்ளார்.

## பாசமழை பொழிந்தார்

நடிகை நயன்தாராவுக்கும், மாளவிகா மோகனனுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக தகவல் பரவி வந்த நிலையில், அதுகுறித்து மாஸ்டர் பட நாயகி விளக்கம் அளித்துள்ளார்.

நடிகை மாளவிகா மோகனன் நடிப்பில் தற்போது மலையாளத்தில் கிறிஸ்டி என்கிற திரைப்படம் தயாராகி உள்ளது. இப்படம் பெப்ரவரி 17 ஆம் திகதி திரையரங்குகளில் ரிலீசாக உள்ளது. இப்படத்தில் மாளவிகா மோகனனுக்கு ஜோடியாக மேத்யூ தாமஸ் நடித்துள்ளார். சமீபத்தில் வெளியான கிறிஸ்டி படத்தின் டிரைலருக்கு அமோக வரவேற்பு கிடைத்தது. இப்படத்தின் புரமோஷன் பணிகளும் படுபிசியாக நடைபெற்று வருகின்றன.

இதனிடையே, கிறிஸ்டி பட புரமோஷன் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற நடிகை மாளவிகா மோகனனிடம் லேடி சூப்பர்ஸ்டார் டைட்டில் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.







துருக்கி

# உயிரிழப்புகளின் எண்ணிக்கை 50,000-ஐ தாண்டும் ஐ.நா

துருக்கி- சிரியா எல்லையில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் சுமார் 33,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 50,000 எட்டக்கூடும் என ஐநா கணித்துள்ளது.

அதே சமயம் நிலநடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றாமல் கட்டடங்களை எழுப்பிய பில்டர்கள், அவர்களுக்கு துணை போன அதிகாரிகள் என 113 பேரைக் கைது செய்ய துருக்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது நிலநடுக்கத்தை சாதகமாக்கி திருட்டு, மோசடி ஆகியவற்றில் ஈடுபட்ட 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துருக்கி



## 35 ஆண்டுகளுக்கு பின்னர் திறக்கப்பட்ட எல்லை

**1988ஆம் ஆண்டு ஆர்மீனியா நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட போது துருக்கி நிவாரண பொருட்களை அனுப்புவதற்காக குறித்த எல்லை கடைசியாகத் திறக்கப்பட்டது**

துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக, துருக்கிக்கும் ஆர்மீனியாவுக்கும் இடையேயான எல்லை சுமார் 30 ஆண்டுகளுக்கு பின்னர் திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் ஒட்டோமன் பேரரசு காலத்தில், 1915ம் ஆண்டு 15 லட்சம் ஆர்மீனிய மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் இருநாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டதால், அலிகன் எல்லை மூடப்பட்டது. எனினும் 1988ஆம் ஆண்டு ஆர்மீனியா நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட போது துருக்கி நிவாரண பொருட்களை அனுப்புவதற்காக குறித்த எல்லை கடைசியாகத் திறக்கப்பட்டது.

அதன் பிறகு, தற்போது மீண்டும் எல்லை திறக்கப்பட்டு அர்மேனியாவில் இருந்து 100 தொன் நிவாரண பொருட்கள் துருக்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யா

## உயிரிழக்கும் ரஷ்ய வீரர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த ஒரு வருட காலமாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் உக்ரேனில் கடந்த வாரங்களை விட நடப்பு வாரத்தில் ரஷ்ய இராணுவ வீரர்களின் உயிரிழப்பு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து உக்ரேனிய தேசிய பாதுகாப்பு சபை விடுத்துள்ள அறிக்கையில், உக்ரேனுடன் நடக்கும் போரில் நாள் ஒன்றுக்கு 824 ரஷ்ய வீரர்கள் உயிரிழக்கின்றனர். அதேசமயம் தங்களது தரப்பு வீரர்கள் ரஷ்யாவின் தாக்குதலை வலுவாக எதிர்கொண்டு வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா போரைத் தொடங்கியபோது இந்த எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 1000 க்கும் அதிகமாக இருந்ததும், பின்னர் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

துருக்கி

## குலுங்கிய வைத்தியசாலை; வைரலாகும் செவிலியர்களின் செயல்

துருக்கியின் காசியாண்டெப் நகரில் கடந்த 6 ஆம் திகதி ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தின் போது வைத்தியசாலை இன்குபேட்டர்களில் வைக்கப்பட்டிருந்த பச்சிளங்குழந்தைகளைச் செவிலியர்கள் பாதுகாத்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

சம்பவ தினத்தன்று குறித்த வைத்தியசாலைக் கட்டிடம் குலுங்கியுள்ள நிலையில் அங்கு குழந்தைகள் பிரிவில் இருந்த இன்குபேட்டர்களும் குலுங்கின.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்ற இரு செவிலியர்கள் குழந்தைகள் கீழே விழாமல் இருக்க இன்குபேட்டர்களை இருக்கமாக பிடித்துக் கொண்டுள்ளனர்.

இதுகுறித்த வீடியோவை துருக்கி சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

தென் ஆபிரிக்கா

## பிரபல 'ரப்' பாடகர் சுட்டுக்கொலை

ஏகேஏ (AKA) என அழைக்கப்படும் பிரபல தென்னாபிரிக்க ரப் பாடகரான கீர்னன் போர்ப்ஸ் கடந்த 10 ஆம் திகதி மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த முன்னணி பாடகரான இவர் ஏராளமான ராப் பாடல்களைப் பாடியுள்ளார்.

இந்நிலையில், சம்பவ




தினத்தன்று டர்பன் நகரில் உள்ள உணவகத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்த அவர் மீது மர்ம நபர்கள் சிலர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இதில், படுகாயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்நிலையில் இது குறித்த விசாரணைகளில் பொலிஸார் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஆர்ஜென்டினா

## ஆர்ஜென்டினாவை நோக்கி படையெடுக்கும் ரஷ்ய கர்ப்பிணிகள்

ரஷ்யா - உக்ரேன் இடையே போர் இடம்பெற்று வரும் நிலையில், 5,000க்கும் மேற்பட்ட ரஷ்யக் கர்ப்பிணிகள் ஆர்ஜெண்டினாவுக்குச் சென்றுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மகப்பேறுக்கு ஒருவார காலமே எஞ்சியிருக்கும் நிலையில், பிறக்கும்



தங்கள் பிள்ளைகளுக்கு ஆர்ஜென்டினாவின் குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளவே ஏராளமாக ரஷ்யக் கர்ப்பிணிகள் அந்நாட்டுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக போலி ஆவணங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளாக ஆர்ஜெண்டினாவுக்குச் செல்லும் ரஷ்யக் கர்ப்பிணிகள், அங்கு குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னரே ரஷ்யாவுக்கு திரும்பிச் செல்கின்றனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பெண்களின் இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# பங்களாதேஷை வென்ற இலங்கை




தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், கேப் டௌணில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பங்களாதேஷுடனான குழு ஒன்று போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், சொப்ஹனா மொஸ்டரி 29 (32), நிகர் சுல்தானா 28 (34), ஷமிமா சுல்தானா 20 (13) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஒஷாடி ரணசிங்கே 4-0-23-3, சாமரி அத்தப்பத்து 4-0-19-2, இனோக றணவீர 4-0-18-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 127 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், ஹர்ஷிதா சமரவிக்கிரம ஆட்டமிழக்காமல் 69 (50), நிலக்ஷி டி சில்வா ஆட்டமிழக்காமல் 41 (38) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மருஃபா அக்தர் 4-1-23-3, நஹிடா அக்தர் 3-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகியாக சமரவிக்கிரம தெரிவானார்.

### புத்தளத்தில் கால்பந்தாட்ட

## மத்தியஸ்தர் சங்கம் உதயம்



■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பொதுக்கூட்டமொன்று, புத்தளம் போல்ஸ் வீதி குளிர்களி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

புத்தளம் கால்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் இதுவரை காலமும் புத்தளம் கால்பந்தாட்ட லீக்கால் நியமனம் செய்யப்பட்டே செயற்பட்டு வந்த நிலையில், மத்தியஸ்த்தர்களுக்கென தனியான சங்கம் ஒன்றைத் தோற்றுவிக்கும் நோக்கிலேயே இப்பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன் போது மத்தியஸ்த்தர்கள் சங்கத்தின் புதிய நடப்பு வருட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஏ.எம். பஸ்ரின்

உப தலைவர்: எம்.ஓ. ஜாக்கிர்

செயலாளர்: எஸ்.எம். ஜிப்ரி

பொருளாளர்: ஏ.எம். கியாஸ்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: எச். ஆர். ஹம்ருசைன், ஏ.ஜே. அம்ஜத், எம். இனாஸ் அஹமத்



### சுதந்திரதின வெற்றிக் கிண்ணப் போட்டி:

## பாலமுனை அல் அறபாவை வென்ற ட்ரைஸ்டார்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

**முதலில் துடுப்பெடுத்தாடிய அறபா, 20 ஓவர்களில் 138 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 139 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ட்ரைஸ்டார் 19.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது**

பாலமுனை அல் அறபா விளையாட்டு கழகத்துக்கெதிரான சுதந்திர தின வெற்றிக் கிண்ண இருபதுக்கு - 20 கடினப்பந்து கிரிக்கெட் போட்டியில் பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டுக் கழகம் வென்றது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அறபா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அறபா, 20 ஓவர்களில் 138 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 139 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ட்ரைஸ்டார் 19.3 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

### ஐ.எல் இருபதுக்கு – 20:

# சம்பியனான கல்ஃப் ஜையண்ட்ஸ்

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வந்த சர்வதேச லீக் (ஐ.எல்) இருபதுக்கு - 20 தொடரில் கல்ஃப் ஜையன்ட்ஸ் சம்பியனானது.

டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெஸேர்ட் வைபர்ஸுடனான இறுதிப் போட்டியில் வென்றே ஜையன்ட்ஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜையன்ட்ஸின் அணித்தலைவர் ஜேம்ஸ் வின்ஸ், வைபர்ஸை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய வைபர்ஸ், வனிடு ஹஸரங்கவின் 55 (27), சாம் பில்லிங்ஸின் 31 (29) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கார்லோஸ் பிறத்வெய்ட் 4-0-19-3, குவைஸ் அஹ்மட் 4-0-29-2, கொலின் டி கிரான்ட்ஹொம் 4-1-18-1, கிறிஸ் ஜோர்டான் 4-0-30-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டிருந்த ஜையன்ட்ஸ், கிறிஸ் லின்னின் ஆட்டமிழக்காத 72 (50), ஜெர்ஹார்ட் எரஸ்மஸ்ஸின் 30 (33), ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 25 (13) ஓட்டங்களோடு 18.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ஹஸரங்க 4-0-28-1, லுக் வூட் 4-0-31-1, டொம் கர்ரன் 4-0-32-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பிறத்வெய்ட் தெரிவானானதுடன், இத்தொடரின் மிகவும் பெறுமதி வாய்ந்த வீரராக கிறிஸ் ஜோர்டான் தெரிவானார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாய்க்கிழமை 14 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.